



**திதிகள் 15**

1 வது - பிரதமை
2 வது - துதியை
3 வது - திரிதியை
4 வது - சதுர்த்தி
5 வது - பஞ்சமி
6 வது - சஷ்டி
7 வது - சப்தமி
8 வது - அஷ்டமி
9 வது - நவமி
10 வது - தசமி
11 வது - ஏகாதசி
12 வது - துவாதசி
13 வது - திரியோதசி
14 வது - சதுர்தசி
15 வது - அமாவாசை அல்லது பௌர்ணமி
(15 x 2 = 30 நாள் (ஒரு மாதம்)

தற்போது நாம் தேதி என்று குறிப்பிடுவது திதி என்ற சொல்லின் கிரியே ஆகும்.

பஞ்சாங்கத்தில் திதிக்கு அடுத்தபடி இடம்பெறுவது நட்சத்திரம். இது சந்திரன் நிற்கும் நட்சத்திர மண்டலத்தைக் குறிக்கும். இதை வைத்து அசுவனி முதல் ரேவதி வரை 27 நட்சத்திரங்கள் உள்ளன. பஞ்சாங்கத்தில் குறிப்பிடப்பெறும் நாழிகை நட்சத்திரத்தின் முடிவுக்காலமாகும். நட்சத்திரக்தை நாளாகக் கணக்கிடுவது தமிழ் மரபாகும்.

பஞ்சாங்கத்தில் நட்சத்திரத்திற்கு அடுத்தபடியாக குறிப்பிடப்படுவது யோகம், விஷ்கம்பம் முதல் வைதிருதை வரை 27 யோகங்கள் உள்ளன. அவற்றுள் சித்தயோகம், அமிர்தயோகம், மரணயோகம் ஆகியவை முக்கியமானவை. மரணயோகம் நல்ல காரியம் செய்வதற்கு உகந்ததல்ல.

ஐந்தாவது உறுப்பு கரணம். இது திதியை அனுசரித்தது. திதியின் முதல் பாதிக்கு ஒரு கரணமும், இரண்டாம் பாதிக்கு அடுத்த கரணமும் ஆக முப்பது திதிகளுக்கு அறுபது கரணமாகும். பஞ்சாங்கத்தில் குறிக்கப்பெறுவது அன்று முதலில் முடிவுபெறும் கரணமும் அதன் நாழிகையும் ஆகம்.

பஞ்சாங்கத்தில் சௌரமானம், சௌர சாந்திரமானம். சாந்திர மானம் என்னும் மூன்று வித நோக்கில் ஆண்டு, மாதம், தேதிகளைக் குறிக்கின்றனர். சூரிய இயக்கத்தைக் கொண்டு கணக்கிடுவது சௌரமானம், சன்திரனின் இயக்கத்தைக்கொண்டு மாதங்களைக்












கணிக்கிட்டுச் சூரியனைக் கொண்டு திருத்திக்கொள்வது சௌர சாந்திரமானம், சந்திரனின் இயக்கத்தைக் கொண்டு கணக்கிடுவது சாந்திரமானம். முற்காலத்தில் தமிழர்கள் சந்திரனைக் கொண்டுதான் மாதங்களைக் கணக்கிட்டனர். எனவேதான் மாதத்திற்குத் தமிழில் திங்கள் (சந்திரன்) என்று பெயர்.

தமிழ் மாதங்களின் பிறப்பும் அதனை ஒட்டி அமையும் ஆண்டுப் பிறப்பும் சூரியனின் இயக்கத்தைக் கொண்டே அமைகின்றன. அதாவது சூரியன் ஓர் இராசியிலிருந்து மற்றோர் ராசிக்குச் செல்லும் நாளையே ஒரு மாதத்தின் தொடக்கமாகக் கொள்கிறோம். இம்முறையில் சூரியன் மேஷராசியில் புகும் நாளே புத்தாண்டின் தொடக்க நாளாகும்.

விண்ணில் சூரியன் செல்வதாகத் தோன்றும் வீதியாகிய இராசி மண்டலத்தை ஒவ்வொன்றும் 30 டிகிரி அளவுள்ள 12 ராசிகளாகப் பிரித்துள்ளனர்.

சூரியன் மேஷ ராசியில் நுழைந்தது முதல் 12 இராசிகளைக் கடந்து மறுபடி மேஷத்தில் நுழையும் வரையுள்ள காலம் ஓர் ஆண்டாகும். இது 365 நாள் 6 மணி 9 நிமிடம் 9 1/2 விநாடிகளைக் கொண்டது.

**ராசிகள் 12**

மேஷம் (Aries - செம்மறியாடு)
இடபம் (Taurus - எருது)
மிதுனம் (Gemini - இரட்டைவிண்மீன்கள்)
கடகம் (Cancer - நண்டு)
சிம்மம் (Leo - சிங்கம்)
கன்னி (Virgo - இளம்பெண்)
துலாம் (Libra - தராசுக்கோல்)
விருச்சிகம் (Scorpion - தேள்)
தனுசு (Sagitarius - வில்)
மகரம் (Capricorn - வெள்ளாடு)
கும்பம் (Aquarius - குடம்)
மீனம் (Pisces - மீன்)

பஞ்சாங்கப்படி ஒருவரின் நட்சத்திரத்தைக் கொண்டு ராசி நிர்ணயிக்கப்படுகிறது. உதாரணத்திற்கு திருவதிரை நட்சத்திரக்காரர்களுக்கு ராசி - மிதுனம் பிறந்த மாதத்தைக் கொண்டு ராசியை நிர்ணயிப்பது ஆங்கில முறையாகும்.






